விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 18 ஜ. ஆகிர் 4 இதழ் 47
யாழ்ப்பாணம் புதன்கிழமை 31—3—82

## “குற்றம் புரியும் இளைஞர்களைத் திருத்த பெற்றோரும் சமுதாயமும் இணைந்து செயலாற்றவேண்டும்”

### பொதுமக்கள்-பொலிஸ் தொடர்பு மகாநாட்டில் ஏ. எஸ். பி. கருத்து

(யாழ்ப்பாணம்)

‘‘குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் இளைஞர்கள்மீது பொலிசார் கடும் நடவடிக்கைகள் எடுத்தால், அந்த இளைஞர்களின் பெற்றோர் பொலிசார் மீது அதிருப்திகொள்கிறார்கள். ஆரம்பத்திலேயே இளைஞர்களைத் திருத்த பெற்றோரும் சமுதாயமும்இணைந்து முயற்சி எடுக்கவேண்டும். இல்லையேல் வருங்காலத்தில் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாதநிலை ஏற்படும்’’ என்று வடபிராந்திய குற்றத்தடுப்புப் பகுதி உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். எஸ். நவரத்தினராஜா கவலை தெரிவித்தார்.

சுன்னாகம் — கோப்பாய் பொலிஸ் பகுதிகளின் பொது மக்கள் — பொலிஸ் தொடர்பு சபை மகாநாடு சுன்னாகத்தில் உள்ள சினிமா தியேட்டரில் நடைபெற்றபோது திரு. நவரத்தினராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப்

(8-ம் பக்கம் பார்க்க)

# விவசாயக் கடன் அறவிடுவது ஒத்திவைப்பு!

## வரட்சி காரணமாக விவசாயிகளுக்கு நிவாரணம்

(ஏ. வி. மாணிக்கம்)

விவசாயிகளின் தவணை தப்பிய கடன்கள் அறவிடப்படுவது 83ம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கடன் தொடர்பான வழக்குகள் சில நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

சுமார் 4—5 வருஷங்களுக்குமுன்பு விவசாயச் செய்கைக்காக யாழ்ப்பாணம், வவனியா, மன்னார் ஆகிய இடங்களில் வசிக்கும் விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கிகளின் மூலம் கடன் பெற்றிருந்தது தெரிந்ததே.

கடன்பெற்ற விவசாயிகள், கடனைச் செலுத்த முடியாத நிலையில் இருந்ததால், அவர்களுக்கெதிராக மத்தியஸ்த தீர்வைக்கு விடப்பட்டு நீதிமன்றகளில் வழகுகள் தொடரப்பட்டிருந்தன.

கடன் பெற்ற விவசாயிகள் நீதிமன்றத்தில் தவணைமுறையிலே பணத்தை செலுத்தி வந்தனர்.

வரட்சி காரணமாக விவசாயிகள் தொடர்ந்தும் தாம் பெற்ற கடனைச் செலுத்த முடியாத நிலையில் கஷ்டப்படுவதால், இதுபற்றி ஆராய்ந்த அமைச்சரவை இக் கடன்கள் அறவிடப்படுவதை ஒத்திவைக்க தீர்மானித்திருந்தது.

அமைச்சரவையின் முடிவையடுத்து கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. பி. திஸநாயக்கா, சகல ப. நோ. கூ. சங்கத் தலைவர்களுக்கும், விவசாயக்கடன் அறவிடுவதை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை நிறுத்திவைக்குமாறு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சில நீதிமன்றங்களில் இக் கடன்தொடர்பா வழக்குகள் நேற்று விசாரணைக்கெடுக்கப்பட்டபோது, மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப் பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

(மா-ம)

### இந்திராவின் வீட்டிலிருந்து மேனகா வெளியேறினார்

புதுடில்லி, மார்ச், 30

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் மருமகளும் காலஞ்சென்ற சஞ்சய் காந்தியின் மனைவியுமான திருமதி மேனகா காந்தி பிரதம மந்திரியின் இல்லத்திலிருந்து வெளியேறி, ஹோட்டலொன்றிற்கு சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரதம மந்திரி இந்திரா காந்தி கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அவரின் இல்லத்திலிருந்து தான் வெளியேறியுள்ளதாகத் திருமதி மேனகா காந்தி நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

இவர் தனது இரண்டு வயது மகனுடன்அங்கிருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

லக்னோவில் இடம்பெற்ற மகாநாடொன்றில் திருமதி மேனகா காந்தி பங்குபற்றியதைத்தொடர்ந்து, திருமதி இந்திரா காந்திக்கும் மேனகாவிற்குமிடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது தெரிந்ததே.

இம்மகாநாடு இந்திரா காந்திக்கு எதிரானவர்களால் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (வெ)

### மலேஷிய திவ்யஜீவனசங்கத் தலைவர் சமாதி எய்தினார்

(யாழ்ப்பாணம்)

மலேஷிய திவ்யஜீவன சங்கத்தலைவர் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி அவர்கள் கடந்த 28ம் திகதி சமாதி எய்திவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சிறுவயதிலேயே ஆத்மீகத் துறையில் நாட்டம் கொண்டிருந்த சுவாமிகள் ரிஷிகேசத்தில் பலகாலம்தங்கி சுவாமி சிவானந்தரின் மடத்தில் பயிற்சி பெற்றார். சந்நியாசம் தரிக்குமுன்னர் பொதுப்பணிகளிலும் ஈடுபட்டதோடு மலேஷியாவில் பணியாற்றினார். பின்னர் அங்கு திவ்விய ஜீவன சங்கத்தின் தலைவராகவும் பொறுப் பேற்றார்.

யாழ்ப்பாணத்தில் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் கடைசியாக இலங்கைவந்து திரும்பினார். சமாதி எய்தியபோது சுவாமிக்கு 72 வயது.

### இந்து மாநாட்டு பிரதிநிதிகள் வரவேற்பு:

## யாழ். செயலகத்தில் இன்று ஆலோசனை மாநாடு

(யாழ்ப்பாணம்)

இந்து மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மடாதிபதிகள் சாதுக்கள் ஆகியோரை யால் மாவட்டத்துக்கும் அழைத்து அவர்களுக்கு வரவேற்பளிப்பதற்கான ஆலோசனை மகாநாடொன்று யாழ் செயகத்தில் இன்று பிற்பகல் 2.30க்கு நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் யாழ் அரசாங்க அதிபர், யாழ் மாவட்ட எம். பி.க்கள் உட்பட அபிவிருத்திசபை உறுப்பினர்கள், இந்து சமய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆலோசகர்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்துமகாநாட்டுக்கு வரும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களில் சுமார் 40பேர் கொண்ட கோஷ்டியே அடுத்த மாதம் 27, 28ம் திகதிகளில் யாழ் மாவட்டத்தில் தங்கியிருந்து புராதனஆலயங்களையும், தமிழ் மக்களின் கலை, கலாச்சாரங்கள் ஆகியவற்றையும் அறியக்கூடியதற்கான நடவடிக்கை எடுப்பது குறித்தும் இம்மகாநாட்டில் ஆராயப்படுமெனத் தெரிகிறது, (மா)

#### சுமூக நிலை

சென்னை, மார்ச். 30

கன்யாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவ மீனவர்களுக்கும், இந்துக்களுக்குமிடையே ஒற்றுமையையும், சுமூக உறவையும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஏற்படுத்தியுள்ளார்.

### “பாரதிசிலை பின்புறச்சுவரில்

## பாரதிபாடல்கள்

### பொறிக்கப்படவேண்டும்”

--- ஆ. துரைராஜசிங்கம்

(யாழ்ப்பாணம்)

‘‘பாரதி நூற்றாண்டுவிழா கொண்டாடும் இவ்வேளையில் நல்லூரில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நிறுவப்பட்ட பாரதியாரின் சிலையின் கீழ் திறப்புவிழாவின் பாது எழுதப்பட்ட வாசகங்கள் தற்பொழுது அழிந்துவிட்டன. இச்சிலை யாரால், எப்பொழுது திறக்கப்பட்டது என்பனபோன்ற விபரங்கள் பொறிக்கப்படவேண்டும். சிலையின் பின்புறமாக இருக்கும் சுவரில் பாரதியாரின் கவிதைகளையும் பொறிக்கவேண்டும்’’

மேற்கண்டவாறு யாழ் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் திரு. ஆ. துரைராஜசிங்கம் பிரேரணை சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினார். இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

#### ஜனுப் ஹமீட் பாராட்டு

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் கொடித்தினம் மூலம் யாழ் பொதுசன நூல்நிலையத்துக்கு நிதிசேகரித்து உதவியளித்தமைக்காக மாணவர்களுக்கும் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தை ஜனுப் சாகுல் ஹமீட் கொண்டுவந்தார். இத்தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ் பொதுசன நூலகத்துக்கு நிதிசேகரிப்பதில் பங்காற்றும் நூலகக் குழுவுக்கும், சபை ஊழியர்களுக்கும் குறிப்பாக அதிக பங்காற்றும் வணபிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளாருக்கும் ஜனுப் சாகுல் ஹமீட் பாராட்டுத் தெரிவித்தார். (மா)

### ரயிலில் ஓசிப்பயணம்

## ஒருமாதம் சிறை

(மாவிட்டபுரம்)

புகையிரதத்தில் ஓசிப் பயணம் செய்த நபர் ஒருவருக்கு ஒருமாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

புகையிரதத்தில் டிக்கட் இன்றி பயணம் செய்ததாக சிதம்பரப்பிள்ளை ஸ்ரீதரன் என்னும் வாலிபர் ஒருவரைக் கைதுசெய்த புகையிரதப்பகுதி பாதுகாவல் அதிகாரிகள் இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவர் குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் 50 ரூபா அபராதம் விதித்தார். அதனை தம்மால் செலுத்த முடியாதுள்ளதாகவும் தவணை தருமாறும் இவ்வாலிபர் கோரினார்.

அபராதப் பணத்திற்கு தவணை தரமுடியாது எனக் கூறிய நீதிபதி அபராதம் செலுத்த முடியாதுவிட்டால் ஒருமாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

### காலரா: 9 பேர் பலி

[கொழும்பு]

வாந்திபேதி (காலரா) நோயினால் இதுவரை 9 பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டது. இந்நோயினால 164 பேர் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

கொழும்பு, பாணந்துறை, மாத்தளை போன்ற இடங்களிலேயே வாந்திபேதி (காலரா) நோய் பரவிவருகிறதாம்.

(வெ)

### ஆலோசனைச் சபை 5 பேர் நியமனம்

டாக்கா, மார்ச், 30

பங்களாதேஷ் இராணுவச் சட்ட நிர்வாகி லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் தனது ஆலோசனைச் சபையில் மேலும் 5 பேரை நியமித்து அதனை விரிவுபடுத்தியுள்ளார். (வெ

### மணிவாக்கு

அறிவினுல் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்ருக்கடை.

—குறள்

# நமது நோக்கு

## பலன் தரும் அரசியல் உபாயமா?

நேர்மையே உபாயமும் தர்மமும் இரண்டுமாகும்; இதுஎக்காலத்துக்கும் ஏற்று கொள்ளக் கூடிய உண்மை; இதனைவிட அரசியல் உபாயம் குறிப்பிட்ட காலத்தில் எழும் தர்மசங்கடங்களுக்கு தற்சாலிக நிவாரணம் அளிப்பதுண்டு.

ஜனதிபதி ஜெயவர்த்தன நாடு முழுவதிலும் (வட பகுதியைத்தவிர) பகிரங்க கூட்டங்களில் பலஅறிவுரைகளை வழங்கி வருவதுநாட்டு மக்கள் அனைவருக்கும், இன, மத, மொழி, பேதமின்றி எல்லோரும் ஒரு நாட்டின் பிரஜைகள் என்ற உணர்வை வளர்க்கும்பெரு நோக்கம் கொண்டே!

அண்மையில்நடைபெற்ற கூட்டமொன்றில் அவருக்கு ஆசியும், ஆலோசனையும் வழங்கிய சிலர் அவரை ஒரு துட்டகெமுனு போன்றஅரசனுக அதிகாரம் செலுத்த வேண்டுமென்றும் வாளெடுத்து தமிழரை அழிக்க வேண்டுமென்றும்கேட்டனராம்! பதில் பயங்கர வாதம்!

இதென்ன விடுகதை என்று சிலர் ஏளனம்செய்யலாம்; ஆனல்இதில்பொதிந்திருக்கும் சிறப்பு, வாளிலுமல்ல; தமிழரை அழிப்பதிலும் அல்ல; கோரிக்கையின் குலச்சிறப்பு துட்டகெமுனு அல்லது பராக்கிரமபாகு அல்லது தர்மபாலாஎன்பதிலுலேயே என்றறிக.

ஒரு குடியரசின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவரில்இந்தக்கோரிக்கை விடுத்தவர்களுக்கு நாட்டமில்லை. ஒரு அரசன், அல்லது சர்வ வல்லமையுள்ள தலைவன்—ஏன் ஒருசர்வாதிகாரி கூட—இதுவே இன்னும் இங்கு மக்கள் விரும்புவது! நூதனமானஉண்மை!

அரசனை ஒழித்த பிரிட்டிஷ் மக்களே அந்த அரச வம்சம் தொடர வேண்டுமென்றும், உணவு, உடை, மாளிகை மற்றும் விருதுகளெல்லாம் இருந்த மாதிரி இருக்க அதிகாரம் மட்டும் இல்லாமல், ஒரு சிறப்புச் சின்னமாக, ஆளும் மன்னனையோ, ராணியையோ இன்றும் போற்றிவருகின்றனர்.

உலகெங்கும் முடிகள் உருண்டோடி விட்டன; இருந்தும் முடிசூடிய ராணியை ஒரு அலங்கார சந்நிதானமாகவும், முடிசூடாத ஆட்சித் தலைவர்களை மன்னராகவும் மதிக்கும் சுபாவம் இன்னும் இருந்துவருகிறது. விபரீதமான போக்கு இது.

இலங்கையில் இத்தகைய மக்கள் பெரும்பான்மையானவராகையால், வாக்குரிமைபெற்ற பொன்விழாவுக்கு பிரிட்டிஷ் மகாராணியைப் பிரதமவிருந்தினராக அழைத்தது மிகப்பொருத்தம்!

வாக்குரிமை பெற்ற வரலாற்றின் அரசியல் தத்துவம் உணர்ந்த மக்கள், ஒரு நாட்டின் பிரதம மந்திரியையோ அல்லது மக்கள் ஆட்சித்தலைவரையோ அழைப்பது இயற்கையும், பொருத்தமுமாகும்.

எனவே இன்றைய அரசியலில், சிறிமாவோ—ஜெயவர்த்தன போட்டி இன்றும் இருந்துவருகிறது; அன்று சேனநாயக்கா—பண்டாரநாயக்காபோட்டி; மக்கள் ஆதரவில் இப்போட்டி அமைந்தாலும், இந்த செல்வாக்குள்ள குடும்பங்களை விட்டு வெளியே செல்லும் மனநோக்கு பொதுமக்கள் மத்தியில் இன்னும் அரும்பவில்லையே! அதுஅவ்வாருக, தமிழரை அழிக்கும்கோரிக்கைக்கு விடை அளித்த ஜனதிபதி சாதுர்யமாகவும் ஹாஸ்யமாகவும் அரசியல் தந்திரம் கொண்ட கருத்தை வெளியிட்டிருந்தார்.

''நான் ஒரு கட்சியின் தலைவன். பலசமூகங்கள், இனங்கள் கொண்ட அரசியல் கட்சி அது; அதன் கொள்கைக்குக் கட்டுப்பட்டு நாட்டின் ஆட்சியை நடத்த வேண்டி இருக்கிறது. எனவேஅவ்வாறுநடக்கும் அதிகாரமோ நோக்கமோ எனக்கில்லை'' என் ஜனதிபதியின் விடையாகும்.

இந்தக் கோரிக்கையின் இன்னெரு அடிப்படைக் கருத்து: பண்டைக்கால ஆட்சிபோல் இன்றும் தமிழர்களே ஆட்சிக்குத் தலையிடி! இது தொக்கு நிற்கின்றது. இதனைத்தலைகீழாகப் புரட்டிப்பார்த்தால் தமிழ் மக்கள் தளர்ச்சியடைய வேண்டியதில்லை. அவர்கள் இன்னும் சரிநிகர் சமானமாக இருப்பது புலப்படுகிறது.

இனி என்ன? எங்கள் பாடு எல்லாவகையிலும் குன்றிவருகிறது என்று தோல்வி பாடும் பொதுமக்களுக்கு தாங்கள் இன்னும் ஒரு 'பகைவர்' என்ற சம அந்தஸ்தைப் பெற்றிருக்கின்ருேம் என்ற தெம்பு வர இடமளித்திருக்கிறது.

ஆயினும் 21வது நூற்ருண்டை எதிர்நோக்கும் இந்த உலகில் பல தீவிர மாற்றங்கள் நடைபெறுவது சகஜம் அப்படியிருந்தும் துட்டகெமுனு காலத்துக்கு நாட்டை இழுத்துச் செல்லும் அதிசய மனிதர் அதிகம் உண்டா? தலைவன் அரசன்போலிருப்பதை விரும்பினுலும் நாட்டின் ஒரு பிரதம பகுதியினரை வாள் கொண்டு அழித்து விட விரும்பும் மக்கள் பலர் உண்டா?

நம்புவதற்கில்லை. இன்று பொதுக்கூட்டங்கள், வைபவங்கள் எல்லாம் தேர்தல் பிரசார மேடைகள்: கட்சிக்கும் கட்சி ஆட்சிக்கும் உள்ள தரும சங்கடங்களை ஊசிமுனையில் அலசி அவற்றைத்தீர்க்கும்வழிவகைகளை பல பாத்திரங்கள்—நாடக பாத்திரங்கள்—வாயில் பொறுப்பிக்கும் அரசியல் உபாயங்கள் அதிகம்.

எனவே எமக்கும் பட்டது இதுதான். ''தமிழர்கள் என்ருெரு இனம் இந் நாட்டில் உண்டு. அவர்களின் பிரதிநிதிகள் எங்கள் ஆட்சியில் உண்டு; எப்படி நாம் அந்த மக்களுக்குத் துரோகம் செய்வது? அவர்களும் வாழ('உம்'மைக் கவனிக்க) இடமளிக்கவேண்டும்.''

இந்தத் தாற்பரியம் கொண்டதே ஜனதிபதியின் அறிவுரை.

இந்நாட்டின் இரு பிரதம இனங்கள் சிங்களவர், தமிழர். அவர்களின் மொழிகள் சிங்களம் தமிழ் இவ்விரண்டு (தேசிய) மொழிகளில் அமைந்ததே இந்த நாட்டின் தேசிய நாகரிகம்; நாட்டிலுள்ள இனத்தவர் அனைவரும் சுதந்திர இலங்கையில் இதற்கு இணைந்தவரே! இது அந்தக்காலம் பேசப்பட்ட கருத்து.

இந்த உண்மை நிலையைப் பின்தள்ளி பல்வேறு இனங்கள் வாழும் இந்நாட்டில் பௌத்த சிங்கள மக்களாகிய நாம் மற்றவர்களும் வாழ வழி விடவேண்டுமென்றபாணி ஆளும் கட்சிக்கு இன்னெரு ஆறுவருட சேவை நீடிப்புக்கு உதவுமென்றும் கொலை வாளும் வேண்டாம், தமிழ்ஈழமும் வேண்டாமென்று விலக்குத் தீர்க்கும் அரசியல் உபாயமா?

# தமிழிற்கு தொண்டாற்றிய 'ஈழகேசரி' பொன்னையா

ஈழகேசரி நா. பொன்னையாவின் நினைவு விழா இன்று குரும்பசிட்டி சன்மார்க்கசபையினரால் கொண்டாடப்படுகின்றது. அவரைப்பற்றி அமரர் கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

திரு. நா. பொன்னையா அவர்கள் ஒருசிறந்த நண்பன். தமிழ் தொண்டன் நாட்டின் நலத்திற்சாகச் சேவை செய்யும் விருப்போடு வாழ்ந்த தேசாபிமானி இத்தகைய ஒரு தமிழனை ஈழத் தமிழகம் மறவாது நினைவு கூருதல்வேண்டும்.

அமரர் கலைப்புலவர் க. நவரத்தினம்

ஈழகேசரி பத்திராசிரியரும் திருமகள் அச்சக சொந்தக்காரருமாகிய திரு. நா. பொன்னையா அவர்கள் பூதவுடல் மறைந்துவிட்டது ஆனல் அவரது புகழுடம்பு மறையவில்லை அவர் வெளியிட்ட அரிய தமிழ் நூல்கள் உலகில் இருக்கும்வரை அவரைத் தமிழகம் மறக்கமுடியாது அவ[illegible] மறைவால் தமிழக[illegible]ந்த தமிழ்த் தொண்[illegible] இழந்தது. ஈழம் ஒரு சிறந்[illegible] தேசாபிமானியை இழந்தது.

திரு.பொனனையா அவர்கள் வறுமையான ஒரு சாதாரண தமிழ்க் குடும்பத்தில் பிறந்து விடாமுயற்சியால் தமிழ்க்கல்வியையும் பொருளையும்தேடிக் கொண்ட ஒருவர் தாம்ற அரிதில் முயன்று பெற் தமிழறிவையும், அதன் மூலம் சம்பாதித்த பொருளையும் தமிழ் மொழியை வளர்ப்பதற்கே உபயோகித்தார் தமிழ்க்கலை ஆர்வத்தில், ஆக்கத்தில் கண்ணும் கருத்துமாக வாழ்ந்தார். விசேடமாக தமிழ் மொழிக்கு ஆக்கம்தேடி உழைத்த பெருமக்கள் அனைவருடனும் தொடர்பும், உறவிம் பூண்டு வாழ்ந்ததுமன்றி சிலருக்குத் தம்மால் இயன்ற பொருளுதவியும் செய்துவந்தார். தமிழ் மொழிவளர்ச்சிக்காக அதிக செலவு செய்துபல நூல்களை அழகிய பதிப்புக்களாக வெளியிட்டார். ஈழகேசரியின் ஆண்டு மலர்களைப் பல வருடங்களாக அழகாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

கலைஆக்கத்திலும் மொழி வளர்ச்சியிலும் மாத்திரம் அவர் பணியாற்றினரல்லர். இலங்கை நாட்டின் அடிமைத் தளையை அறுப்பதற்கு, நாட்டில் தோன்றிய எல்லா இயக்கங்களிலும் பங்குபற்றி முற்போக்குடைய் தலைவர்களுடன் ஒத்துழைத்தார். தீண்டாமை ஒழிப்பு, கதர் அபிவிருத்தி ஆலய சீர்திருத்தம், குடிசைக் கைத்தொழில் விருத்தி முதலிய பணிகளில் ஈடுபட்டுமுன்னின்று உழைத்தார்கள். சுருங்கக்கூறுமிடத்து காந்தியம் இலங்கையில் பரவுவதற்கு ஈழகேசரிப் பத்திரிகையைச் சிறந்த சாதனகாகப் உபயோகித்தார்,

திரு.பொன்னையா அவர்கள் புதிய பணிகளைச் செய்யவேண்டுமென எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருந்தஅவர் தென் இந்தியா சென்று இருந்த பொழுது அங்கு கண்ட கலை ஆராய்ச்சி நிலையங்களைப் போன்று ஒரு நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கருதினர். அவ்வழியில் என்னை முயற்சி எடுக்கும்படி தூண்டியதுமன்றி அத்தகைய ஒரு ஆராய்ச்சிக்கு ஒரு மூலதனமாக [illegible]பதினையிரம் ரூபா தருவதாகவும் [illegible]ளித்தார். திரு பொன்னையா அவர்கள் இக்காலச் சூழ்நிலைக்கு ஏற்ற விதத்தில் சைவசமயம் வளர்ச்சிபெற்று சிறக்கவேண்டுமென்னும் கருத்தோடு சமய குரவர் நால்வர் திருமுறைகளிலும் ஸ்ரீ தாயுமானசுவாமிகள், விவேகானந்தரின் உபதேசங்களிலும் காந்தியடிகள் வாழ்க்கையிலும் அவருக்கு அளவு கடந்த அன்பும் பக்தியுமிருந்தன.

திரு. பொன்னையா தமது மனைவி மக்கள் சுற்றம்பாராது தமிழ் மொழியையும் தமிழ்க் கலைகளையும் நாட்டின் சேவையையும் மதித்துவாழ்ந்தார் என்பது அவருடன் நன்கு பழகியவர்களுக்குத் தெரியும். வள்ளலும் பிரபுவுமான தமிழ் தொண்டனை ஈழத் தமிழகம் மறவாது நினைவுகூருதல்வேண்டும்.

இன்று வங்கித் திறப்பு விழா

# நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் பணிகள்

நெடுந்தீவு ப, நோ. கூ. சங்கம் 1981 சித்திரை மாதத்தில் நெடுந்தீவு மக்களின் சொத்தாக மாற்றப்பட்டபின் தனது எல்லைப்பரப்பில் அது ஆற்றியசேவைகள் பல. இன்று திறந்துவைக்கப்படும் கூட்டுறவுக் கிராமிய வங்கி அதன் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும்.

நா. இராமச்சந்திரன்
(தலைவர்)

மேற்படிசங்கத்தின் பொறுப்புக்களை எனது தலைமையிலான இயக்குனர்சபை ஏற்றுக் கொண்டபோது சுமார் ரூபா 1 லட்சத்து 33 ஆயிரம்வரை நட்டத்தில் இருந்துள்ளது. [கடந்த நிதியாண்டிற்கான கணக்கறிக்கையின்படி] எமது பதவிக்காலத்தில் நாம் பல்வேறு கஷ்டங்களுக்கும் மத்தியில் ஊழியர்களின் தளராத ஒத்துழைப்புடனும் இந்த நட்டத்தை ரூபா 80 ஆயிரமாகக் குறைத்துள்ளோம் என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்ருேம்.

உள்ளூர் உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் பொதுமக்களுக்கு உதவமுடியும் என்பதால் சங்கம் அதற்கான நடவடிக்கைகளைச் செய்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் நெடுந்தீவு மக்களின் நலனையும் தங்களது உற்பத்திப் பொருட்களுக்குநியாயமான சந்தைவாய்ப்புக்களையும் ஏற்படுத்தக் கூடியவகையில் தமது உற்பத்திகளை எம்மிடம் விற்பனைசெய்ய முன்வரவேண்டும். குறிப்பாக மீனவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை நியாயமான விலைக்கு விற்கமுடியாதவாறு தனிப்பட்ட சில முதலாளிகளின் கெடுபிடிகளுக்கு உள்ளாகிப் பாதிப்படைகின்றனர். இந்நிலையை மாற்றியமைக்க எமது கிராமிய வங்கி சிறந்த பயனை வழங்கும். மீனவர்களின் எரிபொருள் பிரச்னைகளைத் தீர்க்கவும் பாவனையாளர்கள் தமக்குத்தேவையான மண்ணெண்ணையை உரியவிலை கொடுத்து வாங்கவும் எரிபொருள் நிலையம் ப. நோ. கூ. சங்கத்திடம் கையளிக்கப்படவேண்டும் என்பதில் நெடுந்தீவு முன்னேற்றக் கழசம் கொண்டிருக்கும் கருத்துக்கு செயல்வடிவம் கொடுக்க உயரதிகாரிகள் முன்வரவேண்டும். இதுதொடர்பாக சங்கம் நடவடிக்கைகளை எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

வசதி குறைந்த மக்களின் உள்ளூர் பிரயாண சேவைக்கென மாதாந்த தவணைக்கட்டண வசதித் திட்டத்தின் கீழ் துவிச்சக்கரவண்டிகளை சகல பகுதி மக்களுக்கும் சங்கம் விநியோகித்துள்ளது. இதே போன்று மாதாந்த அடிப்படையில் எமது கிளைகளின் மூலம் பாவனைப்பொருட்களைக் கடன் அடிப்படையில் பெறுதற்கு திறந்து வைக்கப்படும் வங்கிமூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது, இத்திட்டத்தால் அரசாங்க ஊழியர்களும் கூட்டுத்தாபன ஊழியர்களும் பயனடைவர். வங்கி மூலம் விவசாயக்கடன்கள் கால்நடை வளர்ப்பிற்கான கடனுதவிகள் வீடுகட்டுதல் கிணறு வெட்டுதல் என்பனவற்றிற்கான நீண்ட குறுகிய காலக் கடன்களும்பெறவாய்ப்பிருப்பதால் பொது மக்கள் திறமை

(7ம் பக்கம் பார்க்க)

## கண்கள் பனிக்குதே!

மூன்றெழுத்தாம்
செல்வா என்னும் பெயரிலே
மூன்று தமிழும்
வாழப் பணி செய்தவா!
மூப்பு வந்தும்
நின்பணியை மறந்திலாய்!!
பாப்புனையும்
எனது கண்கள் பனிக்குதே!
அகிம்சையுடனே
சத்தியம் நல் வழியென்றே
சித்தமதிற்
கொண்டுனது பணி செய்தாய்!
வாழ்ந்த இனம்
மீண்டும வாழ எண்ணியே
வாழும் வழிகள்
வகுத்தெமக்குத் தந்தவா!
வாழும் வழிகள்
வகுதெமக்குத் தந்துமே
போகும் வழியைத்
தவறவிட்டுத் தவிக்கிருேம்!
தடம்புரண்டு
தவிக்கும்எம்மை ஆட்கொள்ள
தந்தை செல்வா!
இங்கு உடன் வாருமே!!
மேய்ப்பரின்றி
உமது மந்தை வாடுதே!
மீட்டெடுக்க
எம்மை நாடி வாருமே!!
விட்ட பணிகள்
தொடர்ந்தியற்ற வேண்டுமே!
தட்ட வேண்டாம்
இங்கு உடன் வாருமே!!

—''சரவண. முருகா''

# "அவசரப்பட்டு அர்த்தமற்ற செயல்களில் ஈடுபடாதீர்"

## இளைஞர்களுக்கு 'அமிர்' புத்திமதி

(மாவிட்டபுரம்)

''எமது பகுதியில் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஏனைய பகுதிகளில் இயங்கும் சங்கங்களை விட சிறப்பாக இயங்குவதாக தெரிவிக்கப்படுவதையிட்டு சந்தோஷமடைகிறோம். எமது சொந்தக் காலில் நிற்க முடியாத நிலையிலும் சுய உழைப்புமூலம் பல துறைகளிலும் எமது மக்கள் முன்னேறி வருகிறார்கள். சொந்தக்காலில் நிற்கக்கூடியநிலை ஏற்பட்டால் நாடு முழுவதற்குமே ஒருமுன் மாதிரியாக வழிகாட்டியாக எமது மக்கள் விளங்குவார்கள் என்பது உறுதி.''

இவ்வாறு மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்க புதிய மண்டபத் திறப்புவிழா வரவேற்புவைபவம் என்பவற்றில் கலந்து உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவரும் காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடந்த இவ்விழாவுக்கு முன்னதாக இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட திரு.அ.அமிர்தலிங்கமும், கிராம அபிவிருத்தி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. ஏ. வி. தலகுனேயும், யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் கொல்லங்கலட்டி விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்திய சகிதம் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

திரு. அமிர்தலிங்கம் இவ்விழாவில் மேலும் பேசியதாவது:

''அரச உதவிகளை மட்டும் நம்பியிருந்த நிலை இன்று மாறிவிட்டது. 5000 ரூபா உதவி பெறுவதற்கு 4000 ரூபா செலவில் வரவேற்பு, ஆடம்பரம் செய்யும் நிலையிலிருந்த நமது மக்கள் இன்று அதனை விடுத்து சுய உழைப்புமூலம் முன்னேறத் தலைப்பட்டுள்ளனர். எமது பகுதி வளங்களையும், எமது சக்தியையும் கொண்டு பலதுறைகளிலும் முன்னேறமுடியும் என்பது இன்று ஊர்ஜிதமாகிவருகிறது.

எமது எதிர்கால நல்வாழ்வுக்கு துணிவுள்ளதோர் இளம் சமுதாயம் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. பல பிரச்னைகள், பல சோதனைகள் மத்தியிலும் நிதானமாகசெயல்பட்டுவரும் எமக்கு இளைஞர் சமுதாயம் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கி ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

எதிலும் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு அர்த்தமற்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் எவ்வித பயனும் கிடைக்காது என்பதை இளஞ்சந்ததியினர் உணரவேண்டும். உரிய நேரத்தில் தேவையான பணியை ஆற்ற எமது இலட்சியப் பயணத்தை வெற்றிகரமாகநிறைவேற்ற நாம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இளஞ் சமுதாயம் உறு துணையாக இருக்கவேண்டும். 'எண்ணித்துணிக கருமம்' என்பது போன்று மிகவும் நிதானமாக ஒவ்வொரு நடவடிக்கையையும் சிந்தித்தே மேற்கொள்கிறோம். நடவடிக்கை எடுத்த பின் சிந்திப்பதால் பயன் இல்லை என்பதை இளைஞர்கள் உணரவேண்டும்; எமது மக்களை சிறப்புடன் வாழவைக்கும் பணியில் நாம் துரிதமாக முன்னேறி வெற்றி காண்போம்'' என்றார்.

கிராம அபிவிருத்தி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. தலகுனே பேசும்போது கூறியதாவது;

இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களைவிட யாழ்ப்பாணத்தில் இச்சங்கங்கள் சிறப்பாக இயங்குகின்றன. அதற்குக் காரணம் சிறந்த நிர்வாகிகள் இச்சங்கங்களை நிர்வகித்து வருவதுதான். கிராம அபிவிருத்திச்சங்கங்களது பணி உயர்ந்ததோர் ஸ்தானத்திற்கு வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இது மேலும் வளரவேண்டும் என்றார்.

யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா பேசும்போது கிராம அபிவிருத்திச் திச் சங்கங்கள் நிதியைசெலவு செய்யும்போதுமிகவும் அவதானமாக, நிதி வீணாக்காத முறையில்செய்யவேண்டுமென கூறினார்.

மற்றும் வலி. வடக்கு உதவி அரச அதிபர் திரு, க. மகாதேவா, வலி. வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. க. சீவரத்தினம் உட்படப் பலர் பேசினர்.

மேற்படிகிராமஅபிவிருத்திச் சங்கப்பணிகள் பற்றிய மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

## அரசுக்கு வெற்றி

லண்டன் மார்ச் 30

வரவு செலவுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கும் தீர்மானம் தொடர்பாக இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் இஸ்ரேலிய அரசு வெற்றி பெற்றது.

அரசுக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 27 வாக்குகளும் கிடைத்தன.

எகிப்திடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை ஒப்படைக்கும் வைபவம் அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது. அதுவரை ஆட்சியிலிருக்க இஸ்ரேலிய அரசு ஆர்வம் காட்டிவருகிறது என அவதானிகள் தெரிவித்தள்ளனர். (க)

---

## கிரிக்கட் போட்டியில் 44 1/2 லட்சம் வருமானம்

சென்னை மார்ச்

சென்னையில் நடந்த பாரத இங்கிலாந்து 5 வது டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் 44½லட்சம் நிகரலாபமாகக் கிடைத்துள்ளதாக தமிழ் நாடு கிரிக்கெட் சங்க கௌரவ செயலாளர் திரு. ஸ்ரீ ராமன் தெரிவித்தார்.

கிரிக்கட் போட்டி நடந்த இடங்களில், இங்குதான் இவ்வளவு பெருந்தொகை நிகரலாபமாக கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

---

## இலங்கை பிரதிப் பொலிஸ் மா அதிபர்ஒருவர்

# லண்டனில் திருடினாராம் நீதிமன்றத்தில் ஆஜர்

லண்டன் மார்ச் 30

இலங்கைப் பொலிஸ் சேவையின் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களில் ஒருவரான திரு. திரெல் குணதிலக்கா மீது லண்டன் பொலிஸார் திருட்டுக்குற்றஞ் சாட்டிவழக்குத் தொடர்ந்துள்ளனர்.

திரு. குணதிலக்கா லண்டன் மாநகரின் 'ஒக்ஸ் போர்ட்' வீதியிலுள்ள 'செல்வ்றிஜட்ஸ்' என்ற பிரபலமான வியாபார ஸ்தலமொன்றில் 53 - 80 பவுண்கள் பெறுமதியான சிறு கருவிகள் சிலவற்றையும் பையொன்றையும் திருடியதாகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் குணதிலக்கா இருதய சிகிச்சையை மேற் கொள்வதற்காக சிலவாரங்களுக்கு முன்னர் லண்டன் சென்றிருந்தார். இவருக்கான சிகிச்சையும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருந்தது.

திரு. குணதிலக்கா லண்டன் மால்பரோ வீதியிலுள்ள நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது தாம் சுற்றவாளியெனத் தெரிவித்தார். இதையடுத்து அவரைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. ஆயினும் மீண்டும் இவர் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் ஆஜராக வேண்டியிருந்தது.

இச் செய்திக்கு லண்டன் பத்திரிகைகள் முக்கியமளித்திருந்தனவென்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

---

# பாக்.ஜனாதிபதியை லலித் சந்தித்தார்

கராச்சி மார்ச் 30

இலங்கை கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் வந்து சேர்ந்தார். அமைச்சர் லலித் அத்துலத்முதலி பாகிஸ்தான் ஜனாதிபதியை சந்தித்தார்.

இரு தரப்பினரின் பொருளாதார பிரச்னைகள் குறித்து அமைச்சர் லலித் பாகிஸ்தான் நிதி அமைச்சர் தி குணம் வச் சாகானுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வர்த்தகதுறையை இருதரப்பிலும் விஸ்தரிக்க நிலையமொன்றை அமைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

பாகிஸ்தானிலிருந்து அரிசியை கொள்வனவு செய்ய இலங்கைக்குழு ஒன்று அடுத்த மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமென்றும் அமைச்சர் லலித் தெரிவித்தார். (க)

---

# தலைமைவகிக்கும் அதிகாரமற்ற ஜனாதிபதி

டக்கா மார்ச் 30

பங்களாதேஷ் ஜனாதிபதி சௌத்திரி நிர்வாகத்திற்கு தலைமை தாங்கும் அதிகாரமற்ற ஜனாதிபதியாகவே செயற்ப்படுவார் என அறிவிககப்பட்டுள்ளது.

நிர்வாகத்தை பொறுப்பேற்ற ஜெனரல் எர்ஷாத்தும் அவரது அதிகாரிகளுமே உண்மையான தலைவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் ஜனாதிபதி சௌத்திரி திருகுர்ஆனை மேற்கொள் காட்டி உரைநிகழ்த்தினார்.

நாட்டிற்கு ஆபத்து ஏற்பட்ட சந்தர்ப்பங்களிளெல்லாம் பாதுகாப்பு படையினரே நாட்டைக் காப்பாற்றினார்கள் என்று அவர் கூறினார்.

ஊழல் மோசடிகளை நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட பொது மக்கள் இராணுவ படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பங்களாதேஷ் ஜனாதிபதி சௌத்திரி அறிவித்துள்ளார். (க)

---

## எல்சல்வடோர் தேர்தல்:

# முதல் கட்டவாக்கு எண்ணிக்கை நிலைமை

லண்டன் மார்ச் 30

எல்சல்வடோரில்நடந்ததேர்தலில் முதல்கட்ட வாக்கு எண்ணிக்கையில் கிறிஸ்தவ ஜனநாயககட்சி முன்னணியில் நிற்கிறது.

கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கு 40 சத வித வாக்குகளும் அங்குள்ள பிரதான எதிர்க்கட்சிக்கு 27 சத வீத வாக்குகளும் கிடைத்துள்ளன. இடதுசாரி கட்சிகள் தேர்தலை பகிஷ்கரித்துள்ளன.

60 உறுப்பினரைக் கொண்ட சபையில் எந்தக் கட்சியும் போதிய பெரும்பான்மை பெறுதென அவதானிகள் தெரிவித்தனர். 6 அரசியல் கட்சிகளில் எந்தக் கட்சிக்கும் எதிர்பார்த்த பெரும்பான்மை கிடையாது என கூறப்படுகிறது.

தேர்தல் நடைபெற்றதினம் சில பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றதால் அப்பகுதிகளுக்கு வாக்காளர் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. (க)

---

## மதுரையில் போயிங் விமானம் இறங்க வசதி

சென்னை, மார்ச். 30

போயிங் விமானம் இறங்க வசதியாக மதுரை விமானநிலையத்தை அபிவிருத்தி செய்ய 93 லட்ச ரூபாவை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

6000 ஏக்கர்ஓடுபாதைவலுப்படுத்தப்படுவதோடு, புதிய கட்டடங்களும் அமைக்கப்படும்.

---

## கொலம்பியா இறங்குவதில் தாமதம்

வாஷிங்டன் மார்ச். 80

அமெரிக்க விண்வெளிக்கலமான கொலம்பியா நேற்றிரவு தரையிறங்கத் திட்டமிட்டிருந்தபோதிலும், இறங்கும் நேரம் 24 மணிவரை ஒத்திப்போடப்பட்டது. இறங்குமிடத்தில் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததே இதற்குக் காரணமாகும், (க)

---

## கேர்ணல் கடாபியின் நோக்கம்

லண்டன் மார்ச் 30

பலஸ்தீனியக் கிளர்ச்சியை விடுதலைப் போராட்டமாக மாற்றுமாறு லிபியாத்தலைவர் கேர்ணல் கடாபி தெரிவித்துள்ளார். (க)

---

## ரயில் - பஸ் விபத்தில் 8 பேர் பலி

புதுடில்லி மார்ச் 30

குஜராத்தில் லோத்ரா என்ற கிராமத்தில் நடந்த ரயில்—பஸ் விபத்தில் 8 பேர் பலியானார்கள். 15 பேர் காயமடைந்தனர். பஸ்ஸில்சென்ற பிரயாணிகளே பலியானார்கள் என்று கூறப்படுகின்றது. ரயிலில் சென்ற எவரும் காயமடையவில்லை.

---

## பஸ் - டிரக் விபத்துக்கு 5 பேர் பலி

புதுடில்லி மார்ச் 30

பஞ்சாப்பில் நடந்த பஸ், டிரக் விபத்தில் 5 பேர் பலியானார்கள். 37 பேர் காயமடைந்தனர்.

பஸ்ஸின் டயர் ஒன்று வெடித்ததால், இவ் விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. பஸ்ஸில் சென்ற பிரயாணிகளே பலியானார்கள்.

---

## ஜாக்குவா விமானம் வெள்ளோட்டம்

புதுடில்லி மார்ச் 30

பாரதத்தில் தொலை தூரம் ஊடுருவக்கக்கூடிய ஜாக்குவா விமானம் இன்று வெள்ளோட்டம் விடப்படவிருக்கிறது.

இந்த வைபவத்தில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் கலந்துகொள்வார். (க)

---

## புதிய கமிட்டி உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

தேவரையாளி இந்துக் கல்லூரி அபிவிருத்தி சபை வருடாந்தக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. ஏ. இரத்தின சபாபதி தலைமையில் நடைபெற்றது. புதியநிர்வாகிகளாக கீழ்க் காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: ஆ. இரத்தினசபாபதி, உபதலைவர்கள்: என்.எம். ஆறுமுகம், டாக்டர் க.வேலும்மயிலும், செயலாளர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி, உப செயலாளர் எம். கணேசலிங்கம், பொருளாளர்: எஸ கே. லோகநாதன், கணக்குப்பரிசோதகர்கள் எம்.எஸ்.சோமசுந்தரம், எஸ். சிவலோகநாதன், (கு)

---

## கன்யாகுமரி

# சமாதானக்குழுவின் சேவைக்குப் பாராட்டு

சென்னை மார்ச் 30

கன்னியாகுமரியில் சமாதான குழுவினர் அளித்த சேவைக்கு நாகர் கோவில் ரோட்டரி சங்கத்தினர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சமாதான குழுவினருக்கு நாகர் கோவில் ரோட்டரி சங்கம் வரவேற்பு அளித்தது.

குன்றக்குடி அடிகளார் பிஷப் ஆரோக்கியநாதர் ஜனுப் அகமட் கான் ஆகியோர் சமாதான குழு சார்பில் பங்குபற்றினர்.

குன்றக்குடி அடிகளின் பணி சிறப்பாகஇருந்ததென்று பிஷப் ஆரோக்கியநாதர் பாராட்டு தெரிவித்தார்.

திரு. சங்கர சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இப் பாராட்டுக்கூட்டத்தில் பேசிய குன்றக்குடி அடிகளார் சமாதான முயற்சிக்கு சகல மதத்தினரும் ஒத்துழைப்பு தந்தனர் என்றார்.

## தவக்கால நற்சிந்தனை



சிலுவையானது மோட்ச இராட்சியத்திற்குப் போகிற வழியாயிருக்கையில் அதைச் சுமந்துகொள்ள நீ பயப்படுவானேன்? சிலுவையில் தான் ஈடேற்றம், சிலுவையில்தான் சீவியம், சிலுவைதான் சத்துருக்களிடத்தினின்று உன்னைப் பாதுகாக்கும் சேடயம். சிலுவைதான் பரலோக இன்பம், சிலுவையில் மனம் தைரியமடையும். ஞான சந்தோஷமுண்டாகும். சிலுவையினலன்றி ஆத்தும இரட்சணியமில்லை. நித்திய சீவியத்தில் நம்பிக்கையுமில்லை. ஆதலால் உன் சிலுவையை எடுத்துக் கொண்டு கிறிஸ்துநாதரைப் பின்சென்று நட, நித்திய சீவியத்தை அடைவாய். நீயும் உன் சிலுவையைச் சுமந்து நடக்கவும் சிலுவையில் மரிக்கப் பிரியங் கொள்ளவுந் தக்கதாக அவர் தமது சிலுவையைச் சுமந்து முன்னே நடந்தார். ஏனெனில் நீ அவரோடு மரித்தால்; அவரோடு உயிர்த்தும் போவாய், அவர் பாடுகளுக்குப் பங்காளியாய் இருந்தால் அவர் மகிமைக்கும் பங்காளியாய் இருப்பாய்.

(கிறீஸ்துநாதர் அநுசாரம்)

## இன்று நினைவுதின பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகம், அமரர் கதிரவேலுப்பிள்ளை ஆகியோரின் நினைவுதினப் பிரார்த்தனை இன்று புதன் கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

தந்தை செல்வா நினைவாலயத்தில் நடைபெறும் இப் பிரார்த்தனை வைபவத்தில், இவ்விருதலைவர்களின் பணிகள் இலட்சியங்கள், சேவைகள் குறித்து நினைவுச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

தந்தைசெல்வா அறங்காவல் குழுவும் அறவழிப் போராட்டக்குழுவும் இணைந்து இந் நினைவுதினப் பிரார்த்தனையை நடாத்துகின்றன. (மா)

## வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பன்னாலை கணேச சன சமூக நிலையத்தின் 32வது ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. இ. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது. இளைப்பாறிய தலைமைஆசிரியர் திரு. கா. கதிர்காமத்தம்பி சிறப்பு சொற்பொழிவாற்றினார். திரு. கி. சிவபாலசுப்பிரமணியம் நிலையத்தின் வளர்ச்சிபற்றி எடுத்துக் கூறினார்.

திரு. வி, சிங்கம், நன்கொடையாக வழங்கிய காணி பற்றி தெரிவிக்கப்பட்டு, அவருக்கு நன்றி கூறப்பட்டது.

புதுவருட நிர்வாகிகளாக கீழ்க்காணுவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. இ. கதிர்காமத்தம்பி, உபதலைவர்: திரு. ச திருஞானசம்பந்தர், செயலாளர்: திரு. து. தனபாலசிங்கம், துணைச்செயலாளர்: திரு. இ. விஜயகுமார், பொருளாளர்: திரு. ச. குகராஜா, கமிட்டி உறுப்பினர் திருவாளர்கள் க. கந்தசாமி, வ. யோகேஸ்வரன், தா. அருள்முகானந்தவடிவேல், சு. விமலநாதன், ச. குலசேகரம், இ. சிவகுமார். (க)




Phoenix

வானுயர்ந்த இலாபம் பெற

லங்கா சீமெந்து

அத்திவாரத்திலிருந்து வானளாவும் உயரத்திற்கு சிமெந்தின் தேவை அதிகரித்துள்ளது. கட்டிட நிர்மாண வேலைகள் பெருமளவில் கூடியிருப்பதால் சமாளிக்கமுடியாதளவுக்கு சிமெந்தின் தேவையும் அதிகரித்துள்ளது.

இதனை முழுமையாக உணர்ந்த இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் என்றுமே விற்பனை செய்யக்கூடிய சிமெந்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக லங்கா சிமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

இந்த முயற்சியில் சேர்ந்து நீங்களும் பெருமளவு இலாபம்பெற போதிய வாய்ப்பிருக்கிறது

ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.
பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா

முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு

முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி, 411, காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சிமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ………… விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் …………………………………………

முகவரி …………………………………………

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

லங்கா சீமெந்து லிமிட்டெட்
அல்மனர் கட்டிடம், 302, காலி வீதி, கொழும்பு - 4
தொலைபேசி: 589126

# இடம்பெயரும் மீனவர் தலைமன்னார், மன்னார்க்கடலில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்

## மீனவர்தகராறு பற்றி ஆணையாளர் அறிக்கை

### அறிக்கையை நிராகரித்து மீனவர் 'அப்பீல்'?

[மன்னார்]

''இடம் பெயர்ந்து சென்று மீன்பிடித்தொழிலைச் செய்து வரும் மீனவர்கள்; தலைமன்னார், மன்னார் கடல் பிரதேசங்களில் தொடர்ந்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும். இக் கடல் பிரதேசத்தில் இடம் பெயர்ந்துவரும் மீனவர்கள் இழுவைப்படகு மூலமாகவும் கரைவலை போன்ற பல வகைகளிலும் மீன்பிடித்தொழில் செய்ய அனுமதிக்கப்படவேண்டும்''.

இவ்வாறு தலைமன்னார்கடல் பிரதேசத்தில் மீன்பிடிப்பது தொடர்பாக உள்ளூர் மீனவர்களுக்கும், வெளியூர்மீனவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறு தொடர்பான விசாரணையை மேற்கொண்ட ஆணையாளர் திரு. எஸ். ஜே. எம். ஜி. எஸ். முத்துனயக்கா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் உள்ளூர், வெளியூர் மீனவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள தகராற்றைவிசாரணை செய்து அறிக்கைசமர்ப்பிக்குமாறு கடல்தொழில் அமைச்சு கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்விசாரணை கடந்தவருடம் கடல்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆணையாளர் திரு. எஸ். ஜே. எம். ஜி. எஸ். முத்துனயக்காவினால் மேற்கொள்ளப்பட்டது.

இவ் விசாரணையின் போது உள்ளூர் மீனவர்கள் சார்பில் கருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. சுயஸ்பெல்டானோ, சட்டத்தரணிகள் திரு. சந்திரகாசன், திரு. யோன் தாசன், திரு. புதுமைநாயகம் ஆகியோர் ஆஜராகினர்.

வெளியூர் மீனவர்கள் சார்பில் திரு. பெர்னட் கொறேரு ஆஜரானார்.

விசாரணையின் அறிக்கையை மன்னார் கடல்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை சமர்ப்பித்த ஆணையாளர் திரு. முத்துனயக்கா மேலும் தெரிவித்ததாவது:

''இடம் பெயர்ந்து வரும் மீனவர்கள் மன்னார் கடலோரப் பகுதிகளில் வாடிகள் அமைக்க அனுமதிக்கப்பட வேண்டும். குருசுப்பாடு, நடுக்குடா ஆகிய இரு பாடுகளும் இடம் பெயர்ந்துவரும் மீனவர்களுக்காக ஒதுக்கப்படவேண்டும். இவ்விரு பாடுகளிலும் இடம் பெயர்ந்துவரும் மீனவருக்கு இடம் போதவில்லையென்றால் வேறுஇடங்களில் குத்தகைஅடிப்படையில் வாடிகள் அமைக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

''கரைவலைமீன்பிடிதொழில் செய்பவர்கள், கரையிலிருந்து கடலில் 3 மைல் தூரம்வரை தொழில் செய்யலாம். இழுவைப்படகு மூலம் மீன்பிடித் தொழில் செய்பவர்கள்கடலில் 3 மைல் தூரத்திற்கப்பால் சென்று தொழில்செய்யவேண்டும்.

''இடம்பெயர்ந்து 75ம் ஆண்டுக்கு முன்னர் மன்னார் பகுதிக்கு வந்த மீன்பிடியாளர்கள் தொடர்ந்தும் மன்னார்பிரதேசக் கடலில் மீன்பிடித் தொழிலைச்செய்ய அனுமதிக்கப்படவேண்டும். 75ம் ஆண்டுக்குப் பின்னர் மன்னார் பிரதேசத்தில் மீன்பிடித்தொழில் செய்ய இடம்பெயர்ந்துவரும் மீனவர்கள் மாவட்ட கடல் தொழில் விரிவாக்க அதிகாரியின் அனுமதி பெற்று மன்னார் கடல் பிரதேசத்தில் மீன்பிடித் தொழில் செய்ய அனுமதிக்கப்படவேண்டும்.

''இவ் விசாரணையையடுத்து என்னால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சரியானதாக இல்லையென்றால் இன்னும் ஒருமாத காலத்திற்குள் மீண்டும் அப்பீல் செய்யமுடியும்'' என்றார்.

இவ்விசாரணையின் அறிக்கை சரியானதல்லவென கருத்துத் தெரிவித்த உள்ளூர்மீனவர்கள் மீண்டும் அப்பீல் செய்வதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

---

## தொழில்கல்வி நிலையங்கள்

[கொழும்பு]

சமூக அபிவிருத்திக்கு, தொழில் கல்வி நிலையங்கள் உயிர்நாடி என உயர் கல்வி அமைச்சுசெயலாளர் பேராசிரியர்கல்பகே அறிவித்துள்ளார்.

[க]

---

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச பாவலையாளர்சங்க சம்மேளனம் 11 ம் திகதி காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் என்னும் தலைப்பில் ஓர் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

---

# பண்ணை பஸ்நிலையம் மீண்டும் பாவனைக்கு வரும்?

## மாநகரசபையில் பிரேரணை நிறைவேறியது

### சட்டவிரோத நடவடிக்கைகள்மீது ஒழுங்கு மேற்கொள்ளப்படும்

-- ஏ. வி. மாணிக்கம் --

'யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கட்டடங்கள் கட்டப்படுவதாகவும் ஏற்கனவே இருந்த வீதிகள் மூடப்படுவதாகவும், நீதிமன்றம்மூலம் நடவடிக்கைகள் எடுத்தும்கூட இந்த முறைகேடான செயல்கள் நடைபெற்றுவருகின்றன என்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் உறுப்பினர்கள் பலர் கண்டனம்தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. என். டி. செல்லத்துரை, திரு. அ. செல்வநாயகம் உட்படப்பலர் காரசாரமாக இப் பிரச்னை குறித்து விவாதித்தனர்.

முதல்வர் பதிலளிக்கையில், சட்டவிரோதமாகக் கட்டிடங்கள் கட்டுபவர்கள் மீதும், ஒழுங்கைகளை மூடுபவர்கள் மீதும் சட்ட ஆலோசனை மூலம் நடவடிக்கை எடுக்கும்படி ஆணையாளரைக் கேட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மாநகரசபை சுகாதாரப் பகுதி உயர் உத்தியோகத்தர் ஒருவர், கடமைநேரத்தில் மதுபோதையில் பெண் ஊழியர் ஒருவரை அவதூறான வார்த்தைகளால் பேசியுள்ளதாகத் தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாவென்று முதல்வரைப் பார்த்துக் கேட்டார் திரு. தம்புகந்தையா.

இதே வேளை திரு எஸ். தியாகராசா குறுக்கிட்டு, ''பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இக் காலத்தில் ஒரு பெண்ணை அவமதித்துப் பேசுவதை அனுமதிக்க முடியாது; சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆக்ரோசமாகப் பேசினார்.

இச் சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்பட்ட அன்றே விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளதாகவும், அதன் முடிவை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகவும் முதல்வர் பதிலளித்ததை அடுத்து உறுப்பினர்கள் எவரும் இது பற்றி பேசவில்லை.

குருநகர் சீநோர் பனிக்கட்டி தொழிர்சாலை, பனிக்கட்டியின் விலையை உயர்த்தியுள்ளதால் கடற்றொழிலாளர்அவதியுறுகிறார்கள் என்றும், தொழிலாளர்களின் நன்மை கருதிப் பனிக்கட்டியின் விலையைக் குறைக்கவேண்டும் என்று கோரும் பிரேரணையை திரு. செல்வநாயகம் சமர்ப்பித்துப் பேசினார்.

திருகோணமலை மாவட்ட சபை, பிரிமா ஆலையில் தயாரிக்கப்படும் மாவுக்குப் பைக்கட் வீதம் வரி அறவிடுவது போல், எமது மாநகரசபையும் வருவாயை அதிகரிக்க பனிக்கட்டிக்கு வரி அறவிட வேண்டும் என்று திரு. செல்வநாயகம் ஆலோசனை தெரிவித்தார்.

இக்கட்டத்தில் திரு. எட்வேட் எழுந்து, ''நான் அவருடன் முட்டி மோதிக்கொள்ள விரும்பவில்லை. இத்தொழிற்சாலையில் நான் கடமையாற்றுவதால் இப்பிரச்னை எனக்குத் தான் தெரியும். மின்விலை அதிகரிப்பு. மின்சாரக் கட்டண அதிகரிப்பு போன்றவற்றால் பனிக்கட்டி விலை அதிகரிக்க வேண்டியேற்பட்டுள்ளது'' என்றார். முதல்வர் இச்சமயத்தில் திரு. எட்வேட்டை நோக்கி இப்பிரேரணையை ஆதரித்தா பேசுகிறீர் என்று கேட்டபொழுது இல்லை, நான் எதிர்க்கிறேன் என்றார். ஒரு பிரேரணையைநிறைவேற்றாமல் அப்பிரேரணைமீது பேசக் கூடாது என்று தெரிவித்த முதல்வர், திரு. செல்வநாயகத்தைப் பார்த்து, உமது பிரேரணையை யாரும் அனுமதிக்காதபடியால் அடுத்த கூட்டத்தில் ஆலோசிப்போம் என்று சொல்லி முடிப்பதற்குள், திரு. மரியநாயகம் (த. காங்கிரஸ்) எழுந்து ஆதரிப்பதாகத் தெரிவித்துப் பிரேரணைக்குத் திருத்தமும் கொண்டுவந்தபோது திருத்தம் கொண்டுவரவேண்டிய அவசியமில்லை என்று முதல்வர் சொன்னார்.

துணை முதல்வர் திரு. எம். அலோசியஸ்' பொது மக்களின் நன்மை கருதி சபை இப்பிரேரணையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முதல்வரைப் பார்த்துக் கேட்டார்,

முதல்வர் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விட்டபோது சபையில் சமுகமளித்திருந்த 17 பேரில் திரு எட்வேட் (த. வி. கூட்டணி) தவிர ஏனைய 16 அங்கத்தவர்களும் (த. காங்கிரஸ் உட்பட) ஆதரித்து வாக்களித்தனர்.

வாக்களிப்புமுடிந்ததும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று முதல்வர் தெரிவித்தார்.

அடுத்து மூன்று பிரேரணைகளை திரு. செல்வநாயகம் கொண்டுவந்து நிறைவேற்றியதும் முன்னறிவித்தலின்படி ஜனாப் எச். எம். சாகுல்ஹமீட் எழுந்து ''யாழ்ப்பாணத்தில் வாகன இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கு, பண்ணையில் திறந்துவைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தைத் திரும்பவும் பாவனைக்குவிடவேண்டும் என்னும் பிரேரணையை முன்வைத்தார்.

பண்ணையில்அமைக்கப்பட்ட பஸ்நிலையம் வெளியூர் பஸ்களுக்கென்றே விசேஷமாக அமைக்கப்பட்டதுடன், அமைச்சரினால் திறந்துவைக்கப்பட்டு சிறப்பாக இயங்கிவந்தது என்று குறிப்பிட்ட ஜனாப் சாகுல்ஹமீட், இதனால் சில மினிபஸ் சேவைகள்கூட அங்கிருந்தே நடைபெறவும் செய்த காரணத்தினால் நகரின் அப்பகுதி துரித அபிவிருத்தி அடையும் வாய்ப்பும் உண்டா

(7ம் பக்கம் பார்க்க)

---

மருந்து கலவையாளர்

## பற்றுக்குறையை நீக்க 14 பேருக்கு நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் மருந்து கலவையாளர் பற்றுக்குறையை நீக்குமுகமாக 14 புதிய மருந்து கலவையாளர்கள் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்தமாதம் 2-ம் திகதி யாழ் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகத்தில்நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கிறறாழியர்களாக கடமையாற்றும் சுமார் 45 பேர் இந்த மருந்துகலவையாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சையில் இரசாயனம் ஒரு பாடமாக சித்தி பெற்றிருப்பவர்களே தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம், நிர்வாக அதிகாரி திரு. பி. இராசேந்திரம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (க)

---


தங்க நகைகளுக்கும்
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பினன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக,
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பினன்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

## இளவாலை வெற்றி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற மகளிருக்கான வலைப்பந்தாட்டப்போட்டியில் முதலாமிடத்தை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலைக்கோஷ்டி பெற்றது. இரண்டாமிடத்தைமாதகல் விபுலானந்தர் விளையாட்டுக் கழகம் பெற்றுள்ளது.

## சென்- யோசப் வெற்றி

(அரியாலை)

கொழும்பு சென்ற் யோசப் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையே யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கட் போட்டியில் சென்ற் யோசப் கல்லூரிக் கோஷ்டி வெற்றி பெற்றது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய சென்ற் யோசப் கல்லூரி 50 ஓவர்களில் 6 விக்கட்டுகளை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக் கோஷ்டி 50 ஓவர்களில் 8 விக்கட்டுகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

## பாரதியார் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றுண்டை முன்னிட்டு தேசியக் கலை இலக்கியப் பேரவை நடாத்தும் ஆய்வரங்குத் தொடரின் மூன்றுவது நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமைபிற்பகல் 5-30 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் க. கைலாசபதியின் தலைமையில் நடைபெறும் மேற்படி ஆய்வரங்கில் 'தேசிய இயக்க நெறிகளும் பாரதியும்' என்ற தலைப்பில் திரு. கே. செந்திவேல் ஆய்வுரை நிகழ்த்துவார்.

ஆய்வரங்கின்முடிவில் பாரதியார் பாடல்களைக்கொண்ட இன்னிசை நிகழ்ப்சியும் இடம் பெறும்.

## முஸ்லிம் பிரதிநிதிகள்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய மாநாட்டில் கலந்துகொள்ளவந்த பிரதிநிதிகள், கண்டிக்கும், பேராதனைக்கும் நேற்று விஜயம்செய்தனர். இவர்களுடன் அமைச்சர் எம். எச். முகமத்தும் வந்திருந்தார்.

மல்வத்தை பீட மாநாயக்க தேரோ, இவர்களை வரவேற்று முஸ்லிம்கள், சிங்கள மக்களுடன் இந்நாட்டில் அமைதியாக வாழ்ந்துவருவதாகக் கூறினர்.

## மாணவர்களுக்கு பென்சில் அன்பளிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திற்கு சென்றுவரும் மாணவர்களுக்கு துறைமுக அதிகார சபை தகவல் பிரிவு, பென்சில்களை அன்பளிப்பாக வழங்கிவருகிறது. அத்துடன். நிர்வாகம்பற்றிய துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டுவருகிறது. (க)

## கரை ஒதுங்கும் மீன்கள்!

(மன்னர்)

மன்னர் தென்கடலில் பல்லாயிரம் இருத்தல் எடையுடைய பாரை இன மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கின. இம்மீன் இனங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியதற்கான காரணத்தை அறிய முடியவில்லையென்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

பரி. யோவான் கல்லூரி

## பழையமாணவர் கோஷ்டி 4 விக்கட்டுகளால் வெற்றி!

(அரியாலை)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழையமாணவர் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி பழைய மாணவர்கோஷ்டிக்குமிடையே மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் பரி.யோவான் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டி 4 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

ஐம்பது ஓவர்போட்டியில் முதலாவது முறையாகத்துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி பழையமாணவர் கோஷ்டி 36 ஓவர்களில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களை பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய ஏ. பகீரதன், ஆர். பாலகுமார் ஆகியோர் முறையே 19, 15 ஓட்டங்களையும், கே. அரசரத்தினம் வெளியேறுமல் 15 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய எம். சுரேந்திரா 29 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும், சி. சூரியகுமார் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கட்குகலையும் ஆர். சிவகுருநாதன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் பெற்றனர்.

பரி. யோவான் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டி துடுப்பெடுத்தாடிய பொழுது 6 விக்கட்டுகளை இழந்து 35 3 ஓவர்களில் 116 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இக் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். சிவநாயகம், எஸ். கருணுகரன் ஆகியோர் முறையே 18, 14 ஓட்டங்களையும், எம். சுரேந்திரா, எஸ். டி. குலநாதன் ஆகிய இருவரும் வெளியேறுமல் 23, 34ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய ஆர், நகுலேஸ்வரன் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளைப் பெற்றுர்.

## இன்றைய பலன்

**பங்குனி மாதம் 18ம் திகதி**

புதன்கிழமை

**(31—3—82)**

மேடம்: வேண்டிய அளவுக்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும். புதிய நண்பர்களை தேடிக்கொள்வீர்கள் சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

இடபம்: வணிகர்கள் இன்று அதிக முதலீட்டை தவிர்த்துக் கொள்ளவும். வீணுன சிந்தனைகளால் வேதனைப்படுவீர்கள், சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். துக்கதினம்.

மிதுனம்: தேனுக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கும். மனதில் போராட்டம் ஏற்படும் அதிக சிந்தனைக்கிடமளியாது அமைதியுடன் இருக்கவும். இறைநம்பிக்கை நன்று.

கடகம்: பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் அதிக ஆதாயத் திற்கிடமுண்டு. வசீகரப் பேச்சின் மூலம் எதிரிகளையும் உங்கள் வசப்படுத்துவீர்கள் குடும்பத்தில் மகிழ்சி நிலவும்.

சிங்கம்: அவசரப்போக்கு சிக்கலை தோற்றுவிக்கும் மனதில் விரக்தி தோன்றும் வீணுன சிந்தனையால் சோர்வு தோன்றும்.

கன்னி; மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படும் அளவிற்கு முன்னேற்றம் உண்டு. அறிஞர்களின் ஆதரவு தாராளமாக கிடைக்கும்.

துலாம்: அறவழியில் நாட்டம் செல்லும் வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும் இரக்க சிந்தையில் மூலம் பொருட் செலவு உண்டு. கற்றமனிதர்களின் வாழ்த்துக் கண்டிப்பாக கிடைக்கும்.

விருச்சிகம்: வேவுக்கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகலாம். அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவோர்கள் அதிக கவனம் செலுத்தவும். திருப்தியற்ற தினம்.

தனு: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்சி இடம்பெறும் எதிர்ப்புகள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும். கௌரவம் உயரும்.

மகரம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக்கூடும். வந்துசேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடை ஏற்படலாம். திரைமறைவில் சில சூழ்சிகள் இடம் பெறலாம்.

கும்பம்: உங்கள் நடவடிக்கையில் தனிச் சிறப்புதென்படும் பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவார். பிதாவழி தனமும் சேரும்.

மீனம்: கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும் நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

நெதர்லாந்து உதவி:

## பதுளையில் தொழிற்பயிற்சி நிலையம்

[கொழும்பு)

நெதர்லாந்து அரசின் உதவியுடன் 50 லட்சம் ரூபா செலவில் பதுளையில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில், உருக்கு, ஒட்டு, தகரவேலைகள், கடைச்சல், தச்சு, மேசன் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு வருடமும் 75 பேருக்கு பயிற்சிஅளிக்கப்படும் நெதர்லந்து அரசு, 35 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும் வழங்கியுள்ளது. (க)

## பகிரங்க சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்

''உலக மதங்களின் மீது ஜே.கிருஷ்ணமூர்த்தி ஏற்படுத்திய தாக்கம்'' என்ற பொருளில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. ஸி. வி. விக்னேஸ்வரன் சொற்பொழிவொன்றை நிகழ்த்தவுள்ளார்.

இப்பகிரங்க சொற்பொழிவை இலங்கை பிரம்மஞானசபை யாழ். வேம்படி வீதியிலுள்ள றிம்மர்மண்டபத்தில் ஏப்ரல் 6ம் திகதி மாலை ஒழுங்கு செய்துள்ளது. (கி)


வெஸ்லி ...
தினசரி: 2.30 6.15 9.15
ரஜனிகாந்த்—சீமா
**காளி**

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—சுஜாதா
**மயங்குகிருள் ஒரு மாது**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**அஜாசத்தா** (தமிழ்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**பூந்தளிர்**

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)

சில தினங்கள் மட்டும்
ராஜா தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
பிரதாப் சுரேகா
**த க் க ா ர ா**
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 6-30 9-30
ஏ. வி. எம். ராஜன் - ரவிச்சந்திரன் - லதா நடித்த
**வீட்டுக்கு வந்த மருமகள்**

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:00, 4:30, 7.00 9.45
ROGER MOORE in
**THE SPY WHO LOVED ME**
JAMES BOND 007
(Passes and Concessions Suspended)
அதிபயங்கரக் காட்சிகள் நிறைந்தது

வெகு விரைவில்
ரஜனிகாந்த் நடித்த
**பொல்லாதவன்**

சாந்தி (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 4.45, 7.00, 9.30
He has more than a dozen ways to kill and they all work.
CHARLES BRONSON
in
**"THE MECHANIC"**
— an action packed color movie —
— ADULTS ONLY —

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பெண்குலத்தின் பெருமையை விளக்கும் அற்புதமான வண்ணச் சித்திரம்—ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஒப்பற்ற படிப்பினையாக விளங்கும் உன்னத காவியம்—திடீர்த் தீர்மானத்திஞல் திரைப்பட நட்சத்திரத்திற்கு ஏற்பட்ட விபரீத முடிவைக் காணத் தவருதீர்—
ஸ்ரீபிரியா—கமல்— ரஜனி— நாகேஷ்—
நடிகர் திலகம் சிவாஜி மற்றும் பல
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
**★நட்சத்திரம்★**

யாழ்.றீகல்
தினசரி10—30, 2—30, 6—30, 9—30
சில தினங்கள் மட்டும்
**தனிமரம்**

# வரி விளம்பரம்

## தேவை

கடைவேலைக்கு ஆட்கள் தேவை 15—20 வயதிற்கு உட்பட்டவர்களும் மாநகரசபைக் குக்கிட்ட இருப்பவர்களும் விரும்பத்தக்கது. விளம்பர இல: 2695, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2695

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் அரியாலை 294, கண்டி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை யோகநாதம் அவர்களின் மரணசாதன மெழுதாத சொத்துக்களுக்கு நிர்வாகத்தத்துவம் பெறும் விடயத்தில்
மரணமெய்தியவர்.

மரணச்சொத்து
நியாயாதிக்கம்
இல. 3646/த

யாழ்ப்பாணம் கண்டி வீதி இல. 150/1, கனகசபை யோகநாதன் கைம்பெண் செல்வமணி
மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1982 ம் ஆண்டு பங்குனி மாதம் 19 ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்ற ஆணைப்படி,
தா. குலஞானம்
பதிவாளர்

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 8 ந் திகதி.

வரைந்தவர்:
கு.விக்னேஸ்வரன்
மனுதாரின் சட்டத்தரணி

காரணம் காட்டுவதற்குரிய காலம் 14.5.1982க்கு நீடிக்கப்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணைப்படி
(ஒப்பம்)
தா. குலஞானம்
பதிவாளர்
2687

## தேவை

அனுபவமுள்ள பிளேட்டின் மெஷின்மைன்டரும், வேலை பழக ஆர்வமுள்ள இளைஞர்களும் தேவை. தேவிஅச்சகம். நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2705

உணவு முத்திரை, பலசரக்கு வியாபார நிலையத்திற்கு விற்பனை முகாமையாளர் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். இ. தருமானந்தன், A. D. உடுவில். 2707

## விற்பனைக்கு

நஷனல் வீடியோ (2000 MB மொடல்), 20'' J.V.C. கலர் TV, 30 கசெற் (தமிழ்ப் படங்கள்) விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. கா. சிவாஜீ, 52, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2702

புன்னாலைக் கட்டுவன், ஊரெழுவுக்குக் கிட்டிய அச்செழு கிராமத்தில் முந்திரிகைச் செய்கை, பெரும் தொழிற்சாலைக்கு உகந்த செம்மண் காணி 35 பரப்பு விற்பனைக்குண்டு. போக்குவரத்து, தொலைபேசி வசதியுண்டு. விண்ணப்பிக்க. விளம்பர இல: 2711 மே/பா ஈழ்நாடு, யாழ்ப்பாணம். 2711

## வகுப்பு

ஆங்கில விடுதலை வகுப்புகள் பெண்பிள்ளைகளுக்கு மட்டும். ஆரம்பம் சித்திரை 1ம் தேதி தொடர்பு கொள்ளவும். அருணசலம், சந்தைக்கு அண்மையில், திருநெல்வேலி. 2674

## ஆங்கிலக் கல்வி

நவீன உலகத்தினுட் பிரவேசிக்க ஒரே ஒரு திறவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ் வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்' எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## இந்திரா காங்கிரஸ் 47 இடங்கள்

புதுடில்லி, மார்ச். 30

இரண்டாண்டுக்கு ஒருமுறை நடக்கும் ராஜ்யசபை தேர்தலில் 63 இடங்களில் இந்திரா காங்கிரஸ் 47 இடங்களை கைப்பற்றியுள்ளது. [க]

## ஜனதிபதிக்கு முதல் கொடி

(கொழும்பு)

அகில உலக இந்து மாநாட்டையொட்டி ஏப்ரல் 2ம் திகதி நடக்கும் கொடி தினத்தின் முதற் கொடியை ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவிற்கு நேற்றுக்காலை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை வழங்கினர். (க)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய ஆயர் இல்லம் யாழ்ப்பாணம் அருட்திரு. ஜோண்பிள்ளை ஜோண் சிங்கராயர் அடிகளாரின் மரணச்சொத்து விடயமாக
மரணமெய்தியவர்

மரணச்சொத்து)
நியாயாதிக்கம்) இல. 3638

யோண்பிள்ளை கிரகறி, சில்லாலை, பண்டத்தரிப்பு
மனுதார்.

மேற்படி நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணச்சொத்து நிர்வாகத்தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் சொத்துக்களுக்கு நிர்வாகத்தத்துவம் பெற மேற்குறித்த மனுதாரால் தாக்கல்செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு சித்திரை மாதம் 28 ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் பூரண கட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றூர்.

1982 ம் ஆண்டு 03 ம் மாதம் 29 திகதி.

மன்றின் கட்டளைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்

தயாரித்தவர்:
இ. சபேசன்
மனுதாரின் சட்டத்தரணி
2706

## நெடுந்தீவு ப. நோ. கூ.

('2ம் பக்கத் தொடர்ச்சி)

யும் செயலூக்கமும் இருந்தும் முதலீடு இல்லையே என்ற விரக்தி மனம்பான்மையில் இருந்துவிடுபடமுடியும். இது தவிர எதிர்கால நலனைக்கருத்தில் கொண்டு முதலீட்டுச் சேமிப்பு சாதாரண சேமிப்பு சிறுவர்களுக்கான நீண்டநாள் சேமிப்புக் கணக்குகளையும் வைப்பதன் மூலம் தமது வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளக் கூடிய நிலையும் மக்களுக்கு உருவாக்கித்தரப்பட்டுள்ளது.

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமே உண்மையானசேவைகளை வழங்கமுடியும் என்பதால் கூட்டுறவுத்துறை நேர்மையாக செயற்படவேண்டும். என்று அரசின் கொள்கை. அதற்குரியவாறு நாம் செயற்பட்டு வருகின்றேம் என்பதில் மகிழ்ச்சியடைகின்றேம். வடபகுதியில் நிகழ்ந்த வங்கிக் கொள்ளைகளினுல் கடந்த ஒரு வருடத்திற்கு பேலாக மூடப்பட்டிருந்த இக்கிராமிய வங்கியை மீண்டும் திறப்பதன் மூலமே பின்தங்கிய அபிவிருத்தியற்ற எமது கிராமத்தை முன்னேற்றமுடியும் என்பதால் நாம் எடுத்த துரிதநடவடிக்கைகள் இவ் வங்கியைத் திறந்து வைக்க வழிசமைத்தது.

நெடுந்தீவு மக்களுக்குச்சகல துறைகளிலும் பயன்படக்கூடியதாக வங்கிச் சேவையை வழங்கும் நெடுந்தீவு பலநோக்குக் கூ.சங்கத்தின் நல்நோக்கம் நிறைவுற இங்குள்ள ஒவ்வொரு மக்களும் அதன்சேவையைம் பூரணமாகப் பெற முன் வர வேண்டும். வங்கியின் செயற்பாடுகளின்மூலம் விவசாயிகள், தொழிலாளர்கள், எதிர்கால சந்ததியினர் தமது வாழ்க்கையைச் சுபீட்சம்மிக்கதாக ஆக்கிக்கொள்வார்கள் என்ற உயர்வான நம்பிக்கையுடன் எமது அழைப்பை ஏற்று இந்த வங்கியைத் திறந்துவைக்கும் எமது அன்புக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு கா. பொ. இரத்தினம் அவர்களுக்கும் மற்றும் பெரியோர்களுக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் எங்களது உண்மையான பணி கண்டு தமது இதயபூர்வமான நல்லாசிகளை என்றும் தந்து கொண்டிருக்கும் நெடுந்தீவு மக்களுக்கு நாம் தொடர்ந்து நல்லன செய்வோம் என்று உறுதியளித்து நெடுந்தீவு கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சேவை சிறப்புற உதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேம்

## பண்ணை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கியது என்றூர், என்ன காரணத்தினலோ இந்த பஸ்நிலையம் கைவிடப்பட்டதனல் யாழ். மத்திய பஸ்நிலையத்தில் மீண்டும் இடநெருக்கடியும், பெரியகடைப் பகுதியில் வாகனங்கள்செல்லமுடியாத நெருக்கடியும் எழுந்துள்ளதென்றும், இதைத்தவிர்க்க யாழ். பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் சேவைகளில் ஒரு பகுதியையாவது அல்லது கோண்டாவில் டிப்போ தவிர்ந்த ஏனைய பஸ் டிப்போக்களால் நடாத்தப்படும் சேவைகளை பண்ணை பஸ் நிலையத்திலிருந்து நடாத்துமாறும் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக்கொள்வதாக அவர் சொன்னூர்.

இப்பிரேரணை எவரது எதிர்ப்புமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று முதல்வர் குறிப்பிட்டு, உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். [அ]

## கிராமியவங்கி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கித் திறப்புவிழா இன்று மாலை நடைபெறவிருக்கின்றது.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு.நா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இத் திறப்புவிழாவில் நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூட்டுறவுக்கொடியை ஏற்றி வைப்பார். உதவிக்கூட்டுறவு ஆணையாளர் திரு. சு. வேலாயுதபிள்ளை மங்கலவிளக்கேற்றி வைப்பார். தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் மேற்படி கிராமியவங்கியைத் திறந்துவைப்பார்.

வங்கியின் முதற்கணக்கை மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. என். எஸ். பி. ஆனந்தன், திரு. ஆ. தாமோதரம்பிள்ளை, திரு.செ. செபமாலை ஆகியோர் ஆரம்பித்து வைப்பார்கள்.

திறப்புவிழா நிகழ்ச்சிகளை அடுத்து நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் பிரமுகர்கள் பலர் உரையாற்றவிருக்கின்றனர். (கி)


யாழ். மாநகர தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

**பதவி வெற்றிடங்கள்**

யாழ். மாநகர தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. இதற்கான விண்ணப்பங்களை 10—04—82ம் திகதிக்கு முன்னர், பொதுமுகாமையாளர், யாழ். மாநகர தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

**பொது லிகிதர் தரம் II**

தகைமைகள்

1. க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தியும் 2 வருட அனுபவமும் அல்லது
2. வர்த்தகம், வர்த்தக எண்கணிதம் அல்லது பொருளியல் உட்பட க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி [illegible] அல்லது
3. பொது லிகிதர் தரம் III இல் இரண்டு வருட அனுபவம்.

சம்பள அளவுத்திட்டம்: 160—265 / 5×12, 7 50×6

குறிப்பு:- 1. தமிழ்த் தட்டெழுத்துத் தெரிந்தவர்களுக்கும்,
2. சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
2714



**வீடியோ விற்பனைக்கு**

நஷனல் பனசோனிக் புதிய மொடல் NV—7200—EN
வீடியோ கசெற்றெக்கோடர்
ரூ-இன்-வண் கசெற் றேடியோவும்
விற்பனைக்குண்டு.
**T. தனபாலசூரியர்**
2/313, பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை. 2710



வி க் ர ர் அன் ச ன் ஸ்

**T. V. வீடியோ சென்ரர்**

100, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

★ வாழ்வே மாயம் ★ மூன்றும் பிறை
★ பொல்லாதவன் ★ சட்டம் ஒரு இருட்டறை
★ வா கண்ணு வா ★ நான் நானேதான்
★ ஜாதிக்கு ஒரு நீதி ★ பனி மலர்

ஆகிய புதிய வீடியோ படங்கள் எம்மிடம்
குறைந்த வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

வி க் ர ர் அன் ச ன் ஸ்

தொலைபேசி: 7346 (2713)

தமிழ் இளைஞர்கள்

# கலைகளை முறையாகக் கற்று பெருமை தேடவேண்டும்

## இசை நடன நிகழ்ச்சியில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''இன்றைய இளைய தலைமுறையினர் கலைகளை முறையாகவும், முழுமையாகவும் பயின்று எமது தமிழ் ஈழத் திருநாட்டிற்குபெருமைதேடித் தரும் பணியில் ஈடுபடவேண்டும்''

நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றத்தினரின் 'இலங்கை வேந்தன்' இசை, நடன, நாடகம் நடைபெற்றபோது பிரவிருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்த இசை, நடன, நாடகம் மன்றத் தலைவர் திரு. முத்து இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் ' ஈழத்திரு நாட்டில் இசை, நடன, நாடகத்தை ஊக்குவித்து எமது இன மக்களின் உள்ளங்களில் எழுச்சி பெறச் செய்வதற்கு கிருஷ்ணன் கலைமன்றங்கள் போன்றவை முன்வரவேண்டுமென்றும் இவைகளுக்கு மக்கள் ஊக்கம் அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

''சிங்கள கலை, கலாச்சாரங்களை வளர்க்க ஆயிரக்கணக்கான ரூபாயை செலவிடும் இந்த அரசாங்கம் 'தமிழ் மக்களின் கலை, கலாச்சாரங்களை புறக்கணித்து வருவதாககுறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம் 'டவர்' மண்டபத்துக்கு இம்முறையாவது நிதி ஒதுக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் தாம்வற்புறுத்திக்கேட்டதாலேயே நிதிஒதுக்கப்பட்ட என்றும், எமதுகலைகலாச்சாரங்களை வளர்க்க நாமே முன்நின்று உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

நாடகத்துறையில் தமிழினத்துக்கும், நாட்டுக்கும் பெருமை தேடித்தரும் கலைஅரசு சொர்ணலிங்கம், நடிகமணி வி. வி. வைரமுத்து ஆகியோரையும் திரு. அமிர்தலிங்கம் பாராட்டிப் பேசினார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாநகர சபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில் ''தமிழ் மக்கள் விழிப்புற்று ஆறுகோடி உலகத் தமிழருக்கென ஒருதாயகத்தை அமைப்பதற்காக வீறு கொண்டு போராடிவரும் இக் காலகட்டத்தில் தமிழ்க்கலையை, கலாசாரத்தை பரப்புவதற்கு எனத்தோன்றியுள்ள நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றம் பாராட்டுக்குரியது'' என்றார்.

மற்றும் யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராசாவும் உரையாற்றினார்.

யாழ். பொதுசன நூலக நிதிக்கு மேற்படி கலைமன்றத் தலைவர் திரு. முத்து இராசரத்தினம் 500 ரூபாவுக்கான காசோலை காசோலை ஒன்றை முதல்வர் திரு. இராசா விசுவநாதனிடம் கையளித்தார்.

கொக்குவில் கலைக்கோவில் நடன ஆசிரியை செல்வி ரேலங்கி செல்லையா குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (மா)

### சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அபிவிருத்தி சபையின் வட்டுக்கோட்டை உபஅலுவலக ஊழியர்களுக்கு இம்மாதச் சம்பளம் வழங்கப் படவில்லையாம்.

ஏனைய உப அலுவலகங்களில் 25ம் திகதியே சம்பளம் வழங்கப்படுகின்ற போதிலும், இவ் உப'அலுவலகத்தில் மாத்திரம் வழமையாக 25ம் திகதிக்குப் பின்பே சம்பளம் வழங்கப்படுகிறதாம். இதனல் இந்த உப அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் பெரிதும் சிரமம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கொத்தணி மூலம்

## "ஆசிரியர் பற்றுக்குறையை தீர்த்துவைக்க முடியாது"

(கரவெட்டி)

''இன்று கல்விவெள்ளை அறிக்கைமூலம் அரசு, தனக்குள்ள பல பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முயல்கிறது. குறிப்பாக கொத்தணிப் பாடசாலைகள் மூலம் ஆசிரியர் பற்றுக்குறையை சமாளிக்க முயல்கிறதே ஒழிய ஆசிரியர் பற்றுக்குறையைத் தீர்த்துவைக்க முடியும் என்பது சொல்ல முடியாது.

இவ்வாறு ஈழமாணவர் பொதுமன்றத்தைச் சேர்ந்த திரு. மு. டேவிற்சன் கரவெட்டி சாமியன் அரசடியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கேள்வி எழுப்பினார்.

திரு. க. தேவதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. டேவிற்சன் மேலும் பேசுகையில்:

''ஒற்றைநிலைப் பாடசாலைகள் அமைப்பின்மூலம் முன்னணி வகிக்கும் பாடசாலைகளின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் அப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் உதவிகளிலேயே தங்கியுள்ளது, எனவே இப்படியான பாடசாலைகளில் கல்வி பெறும் வாய்ப்பு செல்வந்தர்களின் பிள்ளைகளுக்கே கிடைக்கும். என்று கூறினார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் திரு. ந. இராசநாயகம், ஈழவேந்தன் ஆகியோரும் பேசினர்கள். (க)


# ஹோம் பினன்ஸ்

லிமிட்.

## திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14'', 20''

## திடகாத்திரமான

சைக்கிள்கள் (HELMET) - தொப்பிகள்

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

## மின் பம்புகள்

கட்டுப்பணமுறையிலும் பெறலாம்

# ஹோம் பினன்ஸ்

லிமிட்.

இல. 82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


### பெற்றேரும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பொலிஸ் — பொதுமக்கள் தொடர்புச் சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கிராமங்களில் ஏற்படும் பிரச்னைகளை கிராம மட்டத்திலேயே தீர்த்துக் கொள்வதற்கான அமைப்புமுறையொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்ட உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினராஜா இந்நாட்டில் பொலிஸ் சேவையில் இருந்த 17,000 பேரில் இப்பொழுது 15,000 பொலிசாரே கடமையாற்றுகின்றனர் என்றும், 2,000 பொலிசார் வெளிநாடுகளில் வேலைபெற்றுச் சென்றுள்ளார்கள் என்றும் சொன்னார்.

மக்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் கூடிக்கொண்டே போகிறது. இதற்கேற்பபொலிசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கலாம் என்று திரு. நவரத்தினராஜா கருத்துத்தெரிவித்தார்.

திரு. பொன். சுகுணேந்திரன் தலைமையுரைநிகழ்த்துகையில், எனது பொலிஸ் நிலையத்தில் பொலிசாரின் எண்ணிக்கை குறைவாக இருந்தும், குற்றச் சம்பவங்கள் குறைந்திருப்பதற்கு பொலிஸ் — பொதுமக்கள் தொடர்புச் சபைகள் ஆற்றிவரும் சேவைகளும் ஒரு காரணம் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் இச்சபைகள் நல்லசேவையாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (மா)

மரம் அரியும் தொழிற்சாலையில்

## ரூ.50 ஆயிரம் பெறுமதியான யந்திரம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மரம் அரியும் தொழிற்சாலையில் பூட்டப்பட்ட களஞ்சிய அறையிலிருந்து 50,000 ரூபா பெறுமதியான இயந்திரம் மாயமாக மறைந்துவிட்டதாம்.

கோப்பாய் பொலிஸ்பகுதிக்குட்பட்ட பகுதியில் இணுவிலைச் சேர்ந்த பொறியியலாளரான அலன் சின்னையா கனகராசா என்பவரது கோப்பாயிலுள்ள தொழிற்சாலையிலிருந்தே இயந்திரம் திருடப்பட்டுள்ளதாக சுன்னுகம் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

காவலாளி இல்லாத இந்தத் தொழிற்சாலைகளஞ்சியஅறைக்குள், மரம் அரியும் இயந்திரம் உட்பட சில உபகரணங்கள்' முள்ளுக்கம்பி 'ரேள் போன்றவற்றை உரிமையாளர் வைத்துப் பூட்டிவிட்டு இணுவிலில் உள்ள தனது வீட்டுக்கு வந்துவிட்டாராம். அண்மையில் தொழிற்சாலைக்குச் சென்று களஞ்சிய அறையைத் திறந்து பார்த்தபோது 50,000 ரூபா பெறுமதியான மரம் அரியும் இயந்திரம் காணமல்போனது தெரியவந்ததாம்,

திருடர்கள் இந்த இயந்திரத்தை லொறியில் ஏற்றிக் கொண்டு சென்றிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

இத் திருட்டு சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (மா)

# சீனவில் கிரிக்கெட் விழா ஏற்பாடுகள்

பீக்கிங், மார்ச், 30

சீனவில் இவ்வருடம் நவம்பர் மாதம் கிரிக்செட்விழா நடைபெறவிருக்கிறது. 33 வருடங்களுக்குபின்னர் சீனவில் இவ்விளையாட்டுவிழா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்குமுன் பாங்கொக்கில் 2 போட்டிகளும் கொங்கொங்கில் 2 போட்டிகளும் நடைபெறும்.

ஒரு வாரம் நடைபெறும் இவ்விழாவில் 30 நாடுகளைச் சேர்ந்த 800 பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

இவ் விளையாட்டு விழாவை நடாத்த சீன அரசு கொள்கையளவில் அங்கிகாரம் வழங்கியுள்ளது. இவ்விழாவில் சீனவின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொள்வார்கள். (க)

### 'ரிட்மனு' நிராகரிப்பு

புதுடில்லி, மார்ச் 30

மேற்கு வங்காள வாக்காளர் பட்டியலுக்கு ஆட்சேபம் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்மனு'வை சுப்ரீம்கோர்ட் நிராகரித்துள்ளது. (வெ)

சிறுப்பிட்டியில்

### செல்வா நினைவு தினம்

[யாழ்ப்பாணம்]

அமரர்கள் தந்தை செல்வநாயகம், கதிரவேலுப்பிள்ளை ஆகியோரின் நினைவுதினக்கூட்டம் நாளை வியாழக்கிழமை மாலை சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூகநிலையமுன்றலில் திரு. க. பத்மநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட யாழ். மாவட்ட எம்.பி. க்கள் யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. நடேசு இராஜேந்திரம், கிராமோதயசபைத் தலைவர் திரு. ஆ. வேலுப்பிள்ளை உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (மா)

### இயந்திர கருவிகள் கொள்முதல்

புதுடில்லி, மார்ச், 30

பாரதத்திடமிருந்து 5 கோடி 20லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர கருவிகளை சோவியத் யூனியன் கொள்முதல் செய்துள்ளது. (க)

தொழிற் சங்கங்கள்:

## நாட்டு நலனில் அக்கறை வேண்டும்

(மாவிட்டபுரம்)

''ஜனநாயக நாடுகளில் தொழிற் சங்கங்களுக்கு முக்கிய இடம் உண்டு. அவை ஊழியர்களது நலனை மட்டுமன்றி நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தியிலும் கவனம் கொள்ளவேண்டும்.''

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ''தொழிற் சங்கங்களும், தொழில் உறவுகளும், தேசிய அபிவிருத்தியும்'' என்னும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா கூறினார்.

யாழ் மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் திரு. அ. மகாசிவம் தலைமையில் நடந்த இக் கருத்தரங்கு யாழ் மாவட்ட தொழில் அலுவலகத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது தொழில் உத்தியோகத்தர்கள் திரு. ஏ. சச்சிதானந்தஜோதி, திரு. கே. தர்மலிங்கம, திருமதி எஸ். பரமசாமி ஆகியோர் கருத்தரங்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்,

### ஒஸ்கார் பரிசு

லண்டன், மார்ச், 30

இரு பிரபல ஹொலிவூட் நடிகர்களுக்கு ஒஸ்கார் பரிசு வழங்கப்பட்டுள்ளது. திரு. ஹென்றின் ஹொண்டாவும், செல்வி கதரின் கேப்பனுமே இவ் ஒஸ்கார் பரிசினைப் பெற்ற நடிகர்களாவர்.

கதரின் கேப்பன் நான்காவது தடவையாக ஒஸ்கார் பரிசு பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வெ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 77 07, 889, 8126.